உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை,

(Regd.)

கும்பகோணம்.

திருக்குறளில் ஒரு குறள்.

ப்ரசுரம் 20. [விலை அணு ஒன்று]

ஸர்வஜித்-ஞ தை-மீ 17வ வெள்ளிக்கிழமை, 30—1—1948.

தர்மம், அர்த்தம், காமம் இவைகளைப்பற்றி நமது மதத்திற்கு ஆதாரமாயிருக்கும் சாஸ்த்ரங்களில் பரமஸூக்ஷ்மமான கருத்துக்களையெல்லாம் தமிழில் ஒருங்கே திரட்டி யெழுதப்பட்ட நூல்களில், திருவள்ளுவருடைய திருக்குறளுக்கு ஈடாக வேறொன்றையும் சொல்வதற்கில்லை.

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்"

என்பது ஒரு குறள். வேதியன் வேதத்தை மறப்பது ஒரு பெரிய தோஷம். அதை தர்மநூல்கள் 'வேதோஜ்யதோஷம்' எனக்கூறுகின்றன. இதையே "ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்", என கெட்டகாலத்திற்கு அறிகுறியாக குறள் கூறியிருக்கிறது. "ஆ பயன் குன்றும்"-"வானம் பெயலொல்லா தென்பதாயிற்று", என்பது பரிமேலழகர் உரை. நூல் மறத்திலினால் பார்ப்பானுடைய பிறப்புக்கு ஏற்படும் இழுக்கைவிட அதிகமாக, தன்பிறப்புக்குரிய ஒழுக்கம் குன்றும்பொழுதே பார்ப்பானுடைய பிறப்பு கெடுகின்றது, என்பது இக்குறளின் மொத்தக் கருத்து.

தர்மத்தைப்பற்றிச் சொல்லும் மகரிஷிகளுடைய ஸூத்ரங்களில் கௌதமர் தர்மஸூத்ரமே முக்கியமானது. அதில் ஜீவனுடைய சரீரபிண்டம் தாய் வயிற்றில் ஏற்படும் காலத்தில் செய்ய வேண்டிய "நிஷேகம்" என்னும் மந்த்ரபூர்வகமான கர்மாமுதல், சரீரபிண்டத்திலிருந்து ஜீவன் வெளிப்பட்டபிறகு இப்பிண்டத்தை தேவதைகளை யுத்தேசித்து மந்த்ரபூர்வகமாக அக்னியில் ஆஹுதி செய்யும் ச்மசானகர்மாவரையில் சுமார் 40 வைதிககர்மரூபமான ஸம்ஸ்காரங்கள் ஜீவர்களுடைய பரிசுத்திக்காக கொஞ்சம் கொஞ்சமாக ஆத்மா பரிசுத்தி அடையும் நோக்கத்துடன் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வித ஸம்ஸ்காரங்களோடு நாம் பழக்கத்திற்கு கொண்டுவரவேண்டிய 8 ஆத்ம குணங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. தமிழ் மொழியில் ஆத்ம குணங்களையே ஒழுக்கமென்றும், கர்மானுஷ்டானங்களை வழக்கமென்றும் பண்டைய அறிஞர் கூறுவர்.

திருஞானசம்பந்தமூர்த்தி ஸ்வாமிகள் மதுரைத் தேவாரத்தில் வேதோக்த கர்மானுஷ்டானமில்லாத சமணர்களைப்பற்றிக் கூறும்போது, அவர்கள் வேதோக்த கர்மானுஷ்டானத்தைப் புறக்கணித்ததை மகாபாபமென்று பொருள்படும்படி 'மறை வழக்கமிலாத மாபாவிகள்", என்று கூறி, அவர்களுக்கு அவ்வித மகாபாபம் தீருவதற்காக, அவர்களை வாதில் வெல்லக் கருணை புரிய வேண்டும், என ஸோமஸுந்தரக்கடவுளிடம் பதிகரூபமாக விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறார்.

கௌதம தர்மஸூத்ரத்திலும் மேற்சொன்ன 40 ஸம்ஸ்காரங்களும் 8 ஆத்மகுணங்களும், அதாவது வழக்கமும் ஒழுக்கமும், சிறந்து விளங்குபவன் உத்தமமான புண்யலோகத்தை அடைகிறான், எனக் கூறப்பட்டிருக்கிறது.

"மறப்பினு மோத்துக் கொளலாகும்" என்று இந்த வியாசத்தின் ஆரம்பத்தில் காட்டப்பட்ட குறளில் உள்ள 'ஒத்து" என்னும் பதம் இன்றும் கேரளத்தில் உலகவழக்கத்தில் இருந்து வருகிறது. இன்றும் கேரளநாட்டவர் வேதத்தை 'ஓத்து" என்றே வழங்கி வருகின்றனர். ஓதப்படுகின்றது "ஓத்து".

"ஓதாம லொருநாளு மிருக்கவேண்டாம்", என்பது ஔவையார் வசனம். இப்பொருளையே ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் 𑌵𑍇𑌦𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌧𑍀𑌯𑌤𑌾𑌂 (வேதோ-நித்யம்-அதீயதாம்) என்று ஸோபான பஞ்சகத்தின் ஆரம்பத்தில் அருளியிருக்கிறார்கள். வேதத்தை அத்யயனம் செய்யவேண்டும். சாஸ்த்ரத்தை ச்ரவணம் செய்யவேண்டும். இதையே முறையே வேதமோதல் சாஸ்த்ரங்கேட்டல் என தமிழறிஞர்கள் வழங்கிவருகிறார்கள்.

'வேதமோதிலென், சாஸ்த்ரம் கேட்கிலின்' என்பது ஆன்றோர் ப்ரயோகம். இதனால் "ஓதல" என்பது அத்யயனத்தையே குறிக்கிறது. வெறும் வேதாத்யயனமும் சாஸ்த்ரச்ரவணமும் மாத்திரம்போதாது. விதிப்படி அத்யயனம்செய்யப்பட்ட மந்த்ரங்களைக் கொண்டு வேதத்தில் விதிக்கப்பட்ட கர்மானுஷ்டானங்களைச் செய்து, அதையும் ஈச்வரார்ப்பணம் பண்ணியே தீரவேண்டும்.

நம்முடைய ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் கைலாஸத்திற்குப் போகும்பொழுது சிஷ்யர்களெல்லாம் பரமேச்வரனுடைய க்ருபையைப்பெற சுலபமான வழி ஒன்று சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். இதுவரையில் சொன்ன வேதாந்தவிஷயங்களில் ஒன்றும் புரியவில்லை, சுலபமாக ஒன்று சொல்லவேண்டும், என்று வேண்டிக்கொண்டார்கள். அப்பொழுது ஸ்ரீ ஆசாரியர்கள் ஐந்து ச்லோகங்களைச் சொன்னார்கள்.

𑌵𑍇𑌦𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌧𑍀𑌯𑌤𑌾𑌂 𑌤𑌦𑍁𑌦𑌿𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌨𑍁𑌷𑍍𑌠𑍀𑌯𑌤𑌾𑌂
𑌤𑍇𑌨𑍇𑌶𑌸𑍍𑌯 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑌾𑌮𑌪𑌚𑌿𑌤𑌿𑌃 𑌕𑌾𑌮𑍍𑌯𑍇 𑌮𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌯𑌜𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ।
𑌪𑌾𑌪𑍌𑌘𑌃 𑌪𑌰𑌿𑌧𑍂𑌯𑌤𑌾𑌂 𑌭𑌵𑌸𑍁𑌖𑍇 𑌦𑍋𑌷𑍋𑌽𑌨𑍁-
𑌸𑌨𑍍𑌧𑍀𑌯𑌤𑌾𑌂 𑌆𑌤𑍍𑌮𑍇𑌚𑍍𑌛𑌾 𑌵𑍍𑌯𑌵𑌸𑍀𑌯𑌤𑌾𑌂 𑌨𑌿𑌜𑌗𑍃𑌹𑌾𑌤𑍍𑌤𑍂𑌰𑍍𑌣𑌂
𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌗𑌮𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ॥

'வேதோ நித்யமதீயதாம் தடுதிதம் கர்ம ஸ்வனுஷ்டீயதாம்
தேநேசஸ்ய விதீயதாமபசிதி: காம்யே மதிஸ்த்யஜ்யதாம்।
பாபௌக: பரிதூயதாம் பவஸுகே தோஷோனுஸந்தீயதாம்
ஆத்மேச்சா வ்யவஸீயதாம் நிஜகிருஹாத்தூர்ணம்
விநிர்கம்யதாம்॥'

என்பது அவைகளில் ஒன்று. நித்யம் வேதாத்யயனம் செய்யவேண்டும். கர்மாவைத் தவறாமல் அனுஷ்டானம்பண்ணு. அந்தக் கர்மாதான் ஈச்வரபூஜை. அவர் எந்தெந்தக் கார்யத்தை எப்

பொழுது பண்ணச் சொல்லியிருக்கிறரோ அப்படிச் செய்து வருவதுதான் பூஜை, என்ற கருத்து இதில் இருக்கிறது. சிலர் உத்ஸவம், பூஜை, பஜனம் முதலியவை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். வேறு சிலர் ஔபாஸனம், அக்னிஹோத்ரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைப்பார்த்து பூஜைபண்ணுகிறவர்கள் "இவர்கள் என்ன பண்ணி என்ன பிரயோஜனம்? கொஞ்சம்கூட பக்தி கிடையாது", என்று தூஷிக்கிறார்கள். அவர்கள் இவர்களைப்பார்த்து, "கொஞ்சங்கூட ஆசார அனுஷ்டானங்கள் இல்லை; தாளம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்; ம்லேச்சரைப் போல இருக்கிறார்கள்; அகங்காரந்தான் இருக்கிறது", என்று சொல்லுகிறார்கள். நியாயமாக மத்தியஸ்தமாகப் பார்த்தால், கர்மானுஷ்டானம் பண்ணுவதுதான் பெரிய பக்தி என்பது தெரியவரும். அதுதான் பஜனை.

ஒரு ப்ரபுவிடம் இரண்டு வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். ஒருவன் எப்பொழுதும் எதிரில் நின்றுகொண்டு ப்ரபுவை ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டே இருக்கிறான். மற்றொருவன் பேசவே மாட்டான், எதிரில் வரமாட்டான். ப்ரபு எந்தக்காரியத்தைச் செய்யவேண்டுமென்று மனதில் நினைக்கிறானே அந்தக் காரியத்தைச் செய்வான். பொதுஜனங்கள், கிட்ட இருக்கிறவனிடத்தில்தான் ப்ரபுவுக்குப் பிரியம், என்று நினைத்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் வேலை செய்கிறவனிடந்தான் அவனுக்குப் பிரியம் இருக்கும். அசடனாகயிருந்தால்தான் ஸ்தோத்திரம் பண்ணுபவனிடத்தில் அதிகப் பிரியமாக இருப்பான். அவன் விதித்த கர்மானுஷ்டானங்களைச் செய்வதுதான் பூஜை. அதனால்தான் 'பரமேச்வர ப்ரீத்யர்த்தம்', என்று ஸங்கல்பம் செய்துகொண்டு கர்மாக்களைச் செய்யவேண்டும். வாஸ்தவமான கர்மானுஷ்டானம், பக்தியும் கர்மாவும் கலந்ததுதான். அதனால்தான் நம்முடைய ஸ்ரீ ஆசார்யர்கள் கர்மானுஷ்டானம் செய்வதுதான் பரமேச்வர பூஜையென்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்படிக்கு,

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையோம்.

Printed at Sarada Vilasa Press, Kumbakonom. Published by Veda Dharma Shastra Paripalana Sabha, Kumbakonam
Copies, 2,500 31—5—1948.